செ.வெ.எண்.39 நாள்:16.05.2017

**திருநெல்வேலியில் இந்திய தொழில் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற வாழை உற்பத்தியாளர் பங்களிப்பு கருத்தரங்கு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கிவைத்து சிறப்புரையாற்றினார்.**

---

திருநெல்வேலி ஆர்.ஆர்.இன் ஹோட்டலில் இந்திய தொழில் கூட்டமைப்பின் சார்பில் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த வாழை உற்பத்தியாளர் பங்களிப்பு கருத்தரங்கம் இன்று (16.05.2017) நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் சிறப்புரையாற்றுகையில் பேசியதாவது.

இந்தியாவில் தமிழகத்தில் தான் வாழை அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழகத்தில் ஒரு ஹெக்டேருக்கு வாழை உற்பத்தி சராசரியாக 52 மெட்ரிக்டன் ஆக உள்ளது. இந்தியாவிலுள்ள பெரும்பாலான வாழை ரகங்கள் தமிழகத்தில் விளைவிக்கப்படுகிறது. அதிக நீர் பாசனமுள்ள இடங்களில் வாழை பயிரிடப்படுகிறது. சொட்டு நீர் பாசனம் வசதி பெற சிறு விவசாயிகளுக்கு 100 சதவிகிதமும், பெரிய விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியமாக அரசு வழங்குகிறது. கிட்டதட்ட 10 முதல் 12 மாதங்கள் வரை சாகுபடி செய்ய தண்ணீர் தேவைப்படுகிறது. விவசாய பொருட்கள் ஒரே சமயத்தில் விளைவிக்கப்படுகின்றன. அதேபோல் ஒரே சமயத்தில் அறுவடை செய்யப்படுகிறது. இதன் காரணமாக உற்பத்தி பொருட்களின் விலை குறைவாக விற்க வேண்டி வருகிறது. எனவே விவசாயிகளின் வசதிக்காக வாழை ஏற்றுமதியை அதிகரிக்க அரசு பல்வேறு வகைகளில் நடவடிக்கை எடுக்கபடுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் பகுதியில் வாழைக்காக குளிர்பாதன கிடங்கு அமைக்கப்பட்டுள்ளது. இதை விவசாயிகள் அதிகம் பயன்படுத்த வேண்டும் இக்கருத்தரங்கின் மூலம் தரமான வாழை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகள் பற்றியும் தங்களின் பகுதிகளுக்கு தோவையான ரகங்கள் என்ன என்பதை அறிந்து கொள்ள முடியும். உற்பத்தியை அதிகரித்து அதிக லபாமடைய விவசாயிகள் இங்கு சொல்லப்படும் கருத்துகளை கவனத்துடன் கேட்டறிந்து நடைமுறைபடுத்திட வேண்டும் என பேசினார்.

இக்கருத்தரங்கில் தூத்துக்குடி வாழை தொழிற் சங்க கூடடமைப்பு துணைத் தலைவர் திரு.சஞ்சய் குனசிங், திருநெல்வேலி மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் திரு.எ.சி.கண்ணன், விருதுநகர் மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் திரு.தமிழ்வேந்தன், வாழை தொழில் சங்க கூட்டமைப்பு துணைத்தலைவர் திரு.சஞ்சய் குனசிங், மதுரை வேளாண்மை பல்கலைக்கழக நீர் மேலாண்மை இயக்குநர் முனைவர் பாலமோகன் மற்றும் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, விருதுநகர் மாவட்ட வாழை உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.